செ.வெ.எண்:29 நாள்: 13.09.2020

## கரூர் மாவட்டம்

**தமிழக அரசால் கரூர் மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள சிறப்பு அலுவலர்களான ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் திரு.சி.முனியநாதன்.இஆப., மற்றும் கூடுதல் காவல்துறை இயக்குநர் (சிலை கடத்தல் தடுப்பு பிரிவு) திரு.அபய்குமார்சிங்.இகாப., ஆகியோர் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., முன்னிலையில் கரூர் மாவட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது**

அதன் விபரம் வருமாறு:

உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் தடுப்பது குறித்து மாண்புமி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் பல்வேறு நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் கரூர் மாவட்டத்தில் எடுக்கப்பட்டு வருகின்றது. கரூர்-நாமக்கல்-திண்டுக்கல் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் கொரோனா தடுப்பு பணிகளை கண்காணிக்க தமிழக அரசின் சார்பில் ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் திரு.சி.முனியநாதன்.இஆப., அவர்களும், கூடுதல் காவல்துறை இயக்குநர் (சிலை கடத்தல் தடுப்பு பிரிவு) திரு.அபய்குமார்சிங்.இகாப., அவர்களும் சிறப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதனடிப்படையில் கரூர் மாவட்டத்தில் கொரோனா பரவல் தடுப்பு பணிகள் குறித்து மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (13.04.2020) சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் சிறப்பு அலுவலர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தற்போதுவரை கரூர் மாவட்டத்தில் கொரோனா பரவலை கட்டுப்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து சிறப்பு அலுவலர்கள் துறைவாரியாக ஆய்வு செய்தார்கள். அதன்படி சுகாதாரத்துறை, ஊரகவளர்ச்சிதுறை, வருவாய்த்துறை, நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் துறைகளின் அலுவலர்களும் மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் தங்கள் துறையின் சார்பாக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தனர்.

பின்னர் சிறப்பு அலுவலர்களான ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் திரு.சி.முனியநாதன்.இஆப., மற்றும் கூடுதல் காவல்துறை இயக்குநர் (சிலை கடத்தல் தடுப்பு பிரிவு) திரு.அபய்குமார்சிங்.இகாப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., ஆகியோர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

கரூர் மாவட்டத்தில் எடுக்கப்பட்டு வரும் கொரோன வைரஸ் பரவல் தடுப்பு பணிகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களும் விரிவாக எடுத்துரைத்தார்கள். குறிப்பாக இந்த தொற்று குறித்து பொதுமக்களுக்கு போதிய அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்துவது, இந்த தொற்று குறித்து பொதுமக்கள் பயப்படாத வகையில் அவர்களுக்கு இதுகுறித்த புரிதலை எற்படுத்தும் வண்ணம் அனைத்து வீடுகளுக்கும் விழிப்புணர்வு துண்டு பிரசுரம் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளுக்கு பிரத்யேக விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு மனதைரியத்தை அளிக்கும் வகையில் உளவியல் ரீதியான ஆலோசனைகளும் துறைசார்ந்த வல்லுநர்களால் வழங்கப்படுகின்றது.

மேலும், தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ளவர்களின் வீடுகளுக்கு நியாயவிலைக்கடைகள் மூலமாக உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டு வருவது குறித்தும், அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப்பொருட்கள் தங்குதடையின்றி கிடைக்க செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. வெளிமாநிலங்களில் இருந்து வந்து கரூர் மாவட்டத்தில் பணியாற்றி வரும் தொழிலாளர்களுக்கும், ஆதரவற்ற நிலையில் உள்ளவர்களுக்கும் உணவுப்பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்வதற்கும், பொதுமக்களுக்கு தேவையான அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் கிடைப்பதற்கும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

கரூர் மாவட்டத்தில் புதிய அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை உள்ளதால் தொற்று பாதிப்புள்ள நபர்களுக்கு சிகிச்கை அளிப்பது எளிதாக உள்ளது. கரூர் மட்டுமல்லாது நாமக்கல் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் இருந்தும் தொற்று பாதித்த நபர்களுக்கு இங்கு சிகிச்சை அளிக்கும் அளவுக்கு போதிய வசதிகள் இருக்கின்றது என்று அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் தெரிவித்துள்ளார்.

காவல்துறையினரும் சிறப்பாக செயல்பட்டு 144 தடை உத்தரவை முழுமையாக செயல்படுத்தி வருகின்றனர். மக்கள் நடமாட்டம் இருக்கும் ஒரு சில இடங்களில் அவர்களுக்கு எடுத்துச்சொல்லி புரியவைத்து வீட்டுக்கு அனுப்பிவைக்கின்றனர். கொரோனா தொற்று பரவல் தடுப்பு பணியில் தன்னலமற்று பணியாற்றி வரும் மருத்துவர்கள் முதல் தூய்மைப்பணியாளர்கள் வரை அனைவரின் பாதுகாப்பையும் உறுதி செய்யும் வகையில் அவர்களுக்கான பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

கரூர் மட்டுமல்லாது நாமக்கல் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் இருந்தும் தொற்று பாதித்த நபர்கள் கரூர் அரசுமருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதால் அவர்களுக்கு சிகிச்சையளிக்க ஏதுவாக முதல் கட்டமாக புதுக்கோட்டை மாவட்டத்தில் இருந்து 5 மருத்துவர்களும், நாமக்கல் மாவட்டத்தில் இருந்து 2 மருத்துவர்களும், திண்டுக்கல் மாவட்டத்தில் இருந்து 5 மருத்துவர்களும் என கூடுதலாக 12 மருத்துவர்கள் கரூர் மாவட்டத்தில் பணியாற்றி வருகின்றனர்.

மேலும், பெரம்பலூர் அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.எ.தேரணிராஜன் கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கூடுதல் முதல்வராக நியமிக்கப்பட்டுள்ளார். சென்னை பொதுசுகாதாரத்துறை இணை இயக்குநர் மரு.ஸ்டான்லி மைக்கேல் கரூர் மாவட்ட சுாதாரத்துறையினரோடு இணைந்து பணியாற்றும் வகையில் தமிழக அரசால் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், மாவட்ட மருத்துவபணிகள் இணை இயக்குநராக மரு.ராஜ்மோகன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது, இரத்தப்பரிசோதனை துரிதமாக நடந்து வருகின்றது. இருந்தாலும், இரத்தப்பரிசோதனை செய்ய கூடுதலான கருவிகள் இருந்தால் இன்னும் அதிக அளவிலனா இரத்தப்பரிசோதனை மேற்கொள்ள இயலும் என்று அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் தெரிவித்துள்ளார். அரசின் கவனத்திற்கு அவர்களின் கோரிக்கை தெரிவிக்கப்படும்.

டெல்லி மாநாட்டுக்கு சென்று வந்த 41 நபர்களுக்கும், அவர்களின் குடும்பத்தினர் 91 நபர்களுக்கும், அவர்களோடு தொடர்பில் இருந்த 325 நபர்களுக்கும் இரத்தப்பரிசோதனை எடுக்கப்பட்டுள்ளது.

இன்று (13.04.2020) காலை நிலவரப்படி கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மொத்தம் 159 நபர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் கொரோனா தொற்று உள்ளவர்கள் 127 நபர்கள். தொற்று இல்லை என்று இரத்தப்பரிசோதனையில் முடிவு தெரிந்தவர்கள் 32 நபர்கள்.

கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களில் 9 நபர்கள் மருத்துவர்களின் அயராத, அற்பணிப்பு உணர்விலான தொடர் சிகிச்சையால் குணமடைந்து உள்ளனர். அவர்களை வீட்டிற்கு அனுப்புவது குறித்து மருத்துவர்கள் விரைவில் முடிவு செய்வார்கள். இரத்தப்பரிசோதனையில் தொற்று இல்லை என்று முடிவு தெரிந்தவர்களில் 28 நாட்களை கடந்த 19 நபர்களும் மருத்துவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் விரைவில் வீட்டிற்கு அனுப்பிவைக்கப்படுவார்கள். கொரேனா பாதிப்பு இல்லாத மாவட்டமாக கரூர் மாவட்டத்தை உருவாக்க தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் போர்க்கால அடிப்படையில் எடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு தெரிவித்தனர்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.இராஜேந்திரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.இரா.பாண்டியராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் இயக்குநர் திருமதி.எஸ்.கவிதா, அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர்கள் மரு.ரோஸிவெண்ணிலா, மரு.தேரணிராஜன், சுகாதாரத்துறை இணை இயக்குநர்கள் மரு.ஸ்டேன்லி மைக்கேல், மரு.ராஜ்மோகன், கரூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.வ.சந்தியா, ஊராட்சிகளுக்கான உதவி இயக்குநர் திரு.உமாசங்கர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.குருராஜன் உள்ளிட் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.